
தினமணி

**இன்றைய வேளாண் செய்திகள்**

**01.08.2013**

## தூய்மையாக பால் உற்பத்தி செய்வது எப்படி?



தூய்மையான வகையில் பால் உற்பத்தி செய்திட நாமக்கல் கால்நடை மருத்துவக் கல்லூரி நிர்வாகம் பல்வேறு யோசனைகளை தெரிவித்துள்ளது.

இதுகுறித்து அந்தக் கல்லூரியின் விரிவாக்கத் துறை பேராசிரியர்கள் என்.நர்மதா, வெ.உமா, ஜோதிலட்சுமி, எம்.சக்திவேல் ஆகியோர் கூறியது:

மனித உடலுக்குத் தேவையான அனைத்து ஊட்டச் சத்துகளும் நிறைந்த சமச்சீர் உணவாகப் பால் விளங்குகிறது. இறைச்சி சாப்பிடாதவர்களுக்கு பால் முக்கிய உணவாகும். எனவே, பாலை நல்ல முறையில் அதன் சத்துகள் கெடாதவாறு உற்பத்தி செய்திட வேண்டும்.

அசுத்தமான சூழலில் பால் உற்பத்தி செய்வதால் பாலின் மூலம் காசநோய், தொண்டைப் புண், டிப்தீரியா, டைபாய்டு, வயிற்றுப் போக்கு ஆகிய நோய்கள் வரக்கூடும். தவிர, பாலில் சேரும் கிருமிகள் பன்மடங்கு பெருகி பாலின் தரத்தையும் கெடுத்து விடும்.

எனவே, பால் கறக்கும் போது கவனமாகவும், விரைவாகவும், அதேசமயம் மாட்டின் மடியிலுள்ள முழுப் பாலையும் கறக்க வேண்டும். ஐந்து விரல்களாலும் காம்பைப் பிடித்து உள்ளங்கையின் மீது அழுத்தி பால் கறக்கும் முறை கன்று ஊட்டுவது போன்று காம்புகளின் எல்லாப் பகுதியிலும் ஒரே அளவான அழுத்தத்தைக் கொடுக்க வேண்டும்.

கறவை மாடுகளின் மடியில் சில கிருமிகள் இருக்க வாய்ப்புள்ளன. எனவே, பால் கறக்கும் போது முதலில் வரும் பாலை நீக்கிவிட வேண்டும். இவ்வாறு செய்வதால் காம்பிலுள்ள கிருமிகளை ஓரளவு போக்கிவிடலாம்.

கறவை மாடுகள் காசநோய், கருச் சிதைவு, அடைப்பான், மடிவீக்கம் ஆகிய நோய்களால் பாதிக்கப்பட்டுள்ளதா என பரிசோதித்திட வேண்டும்.

மாடுகளின் உடலிலுள்ள அசுத்தங்களான உரோமம், மண், சாணம், வைக்கோல் ஆகியவற்றுடன் சில கிருமிகள் பாலில் சேரக்கூடும். எனவே, மாடுகளை நன்கு தேய்த்து அடிக்கடி கழுவி சுத்தமாக வைத்திருக்க வேண்டும். குறிப்பாக, மடியின் மீதும், பக்கத்திலுள்ள இடங்களிலும் நீண்ட ரோமம் காணப்பட்டால் அவற்றை கத்தரித்து நீக்கலாம். பால் கறப்பதற்கு முன் மடி, பக்கத் தொடை ஆகிய பாகங்களைப் பொட்டாசியம் பெர்மாங்கனேட் கலந்த நீரால் கழுவி சுத்தமான உலர்ந்த துணியால் துடைப்பது சரியான முறையாகும்.

மேலும், பால் கறக்கும் முன் கொட்டகையைக் கூட்டுவதாலும், மாடுகளைத் தேய்ப்பதாலும், காய்ந்த தீவன வகைகளைக் கொடுப்பதாலும் கொட்டகையின் காற்று அசுத்தமடைந்து பாலில் சேர வாய்ப்புண்டு. எனவே, இந்த அசுத்தங்களைப் போக்க பால் கறக்கும் இடத்தை நன்கு கழுவி சுத்தமாக வைத்திருக்கவும் வேண்டும். குறுகிய வாயுள்ள பால் பாத்திரங்களை உபயோகிப்பதன் மூலம் காற்றால் சேரும் அசுத்தங்களை ஓரளவு குறைக்க முடியும்.

பால் கறப்பவர் காசநோய், டைபாய்டு, தொண்டைப் புண், டிப்தீரியா, காலரா, வயிற்றுப் போக்கு ஆகிய நோய்களால் பாதிக்கப்பட்டிருந்தால், பால் கறக்கும்

போது அவர் தும்முவதாலும், பேசுவதாலும் உடம்பிலுள்ள கிருமிகள் பாலில் சேர வாய்ப்புண்டு.

தவிர, பால் கறப்பவரின் நகங்களின் மூலம் பாலில் கிருமிகள் சேர்ந்து அசுத்தம் அடையலாம். எனவே, நகங்களை வெட்டி, பால் கறப்பதற்கு முன் கைகளை நன்றாகக் கழுவிச் சுத்தம் செய்து, உலர்ந்த சுத்தமான துணியில் துடைத்த பின், பால் கறக்க தொடங்க வேண்டும். சரியாகச் சுத்தம் செய்யாத பாத்திரத்தில் உள்ள சிறு பள்ளங்கள், விளிம்புகள் ஆகியவற்றில் படிந்துள்ள அசுத்தங்கள் பாலில், கிருமிகள் வளர்வதற்குச் சாதகமாகக் கூடும்.

எனவே, பாலைக் கறக்க, சேகரிக்க, உபயோகப்படுத்த பாத்திரங்கள் மடிப்பு, விளிம்பு, பள்ளங்கள் இல்லாமல் ஒரே சீரான அமைப்புள்ளதாக இருக்க வேண்டும். இதைச் சுத்தம் செய்வதும் எளிதாக இருக்கும். பாத்திரங்களைச் சுத்தம் செய்ய சோப்பு உபயோகிக்கக் கூடாது.

ஏனெனில், சோப்பு பாலில் ஒவ்வாத வாசனையை ஏற்படுத்தும். பால் கறக்கவும், சேகரிக்கவும் அதற்கென தயாரிக்கப்பட்ட சுத்தமான பாத்திரங்களை உபயோகிப்பது நல்லது.

பால் கறப்பவர் காசநோய், டைபாய்டு, தொண்டைப் புண், டிப்தீரியா, காலரா, வயிற்றுப் போக்கு ஆகிய நோய்களால் பாதிக்கப்பட்டிருந்தால், பால் கறக்கும் போது அவர் தும்முவதாலும், பேசுவதாலும் உடம்பிலுள்ள கிருமிகள் பாலில் சேர வாய்ப்புண்டு.

**அதிக வருவாய் ஈட்ட சிறு தானியங்கள் பயிரிடலாம்!**



ஆடிப் பட்டத்திற்கேற்ற சிறு தானியப் பயிர்களான சோளம், கம்பு, ராகி, மக்காச்சோளத்தைக் குறைவான நீரைப் பயன்படுத்தி பயிரிட்டு அதிக வருவாய் ஈட்டலாம்.

இதுகுறித்து மாவட்ட உழவர் பயிற்சி நிலைய வேளாண்மை துணை இயக்குநர் (பொ) பி. வேணுகோபால் வெளியிட்ட செய்திக் குறிப்பு: உடல் நலத்திற்கு சிறுதானியங்களின் பங்கு முக்கியமாகி விட்டதை மக்கள் உணர்ந்துள்ளதால், தற்போது அதற்கு மவுசு அதிகரித்துள்ளது.

கம்பு: மானாவாரியிலும், இறவையிலும் செம்மண், குறுமண் மற்றும் இருமண் நிலங்களிலும் சாகுபடி செய்யப்படுகிறது. ஆடிப் பட்டத்தில் கோ 7, கோ (சியு) 9, எக்ஸ் 7 மற்றும் ஐசிஎம்வி 221 ஆகிய ரகங்கள் சிறந்தவை. நிலத்தை இரும்புக் கலப்பை மற்றும் நாட்டுக் கலப்பைக் கொண்டு இரு முறை உழுது, நிலத்தில் கட்டிகள் இல்லாமல் தயார் செய்ய வேண்டும்.

ஏக்கருக்கு உயிர் உரங்களான அசோஸ்பைரில்லம் 4 பொட்டலம் மற்றும் பாஸ்போ பாக்டீரியா 4 பொட்டலம் ஆகியவற்றை மக்கிய தொழு எருவுடன் கலந்து மண்ணில் இட வேண்டும். 45 செ.மீ. இடைவெளியில் பாத்திகள் அமைக்க வேண்டும் அல்லது நீர் அளவைப் பொறுத்து 10 அல்லது 30 செ.மீட்டர் பாத்திகள் அமைக்க வேண்டும்.

ராகி: கோ 12, கோ 13, ஜிபியு 28, ஜிபுயு 67 ரகங்களைப் பயிரிடலாம். சான்று பெற்ற விதைகளைப் பயன்படுத்துவது நல்லது. வறட்சியைத் தாங்கி வளர, பொட்டாசியம் டை ஹைட்ரஜன் பாஸ்பேட் 20 கிராமுடன் ஒரு லிட்டர் நீர் கலந்த கரைசலில் விதைகளை ஆறு மணி நேரம் ஊறவைத்து, நிழலில் உலர்த்திய பின் விதைத்தால் வறட்சியைத் தாங்கி வளரும்.

விதைப்பதற்கு 24 மணி நேரத்திற்கு முன் ஒரு பொட்டலம் அசோஸ்பைரில்லம், ஒரு பொட்டலம் பாஸ்போ பாக்டீரியா உயிர் உரங்களைத் தேவையான அளவு ஆறிய அரிசிக் கஞ்சியுடன் கலந்து, ஏக்கருக்கு 4 கிலோ விதையுடன் கலக்கி நன்கு நிழலில்

உலர்த்தி பின் விதைக்க வேண்டும். மண் பரிசோதனை முடிவுகளின்படி உரமிடுதல் சிறந்தது. இல்லையெனில், பொதுப் பரிந்துரையான ஏக்கருக்கு 16:8:8 கிலோ தழை, மணி மற்றும் சாம்பல் சத்துக்களைத் தரும் உரங்களான 35 கிலோ யூரியா, சூப்பர் பாஸ்பேட் 50 கிலோ, மூரியேட் ஆப் பொட்டாஸ் 13 கிலோ இடலாம்.

மக்காச்சோளம்: நீர்த் தேவை அதிகமுள்ள அனைத்துப் பயிர்களுக்கும் சிறந்த மாற்றுப் பயிராக மக்காச்சோளம் பரிந்துரைக்கப்படுகிறது. குறைந்த காலத்தில் விவசாயிக்கு உடனடி வருவாயை இந்தப் பயிர் அளிக்கிறது. தண்ணீர் பற்றாக்குறை நிலவுவதால் 90-100 நாள்களில் உயர் விளைச்சலும், கூடுதல் வருவாய் பெற நவீன தொழில்நுட்பங்களைப் பின்பற்ற வேண்டும்.

மானாவாரியில் ஆடிப் பட்டத்திலும், இறவையில் ஆடி, புரட்டாசி மற்றும் தைப் பட்டங்களிலும் சாகுபடி செய்யலாம். கோ 1, கோ.எச்.3, கோ.எச்.4 ரகங்கள் அனைத்துப் பகுதிகளிலும் பயிரிட ஏற்றதாகும். ஏக்கருக்கு ரகங்களுக்கு 8 கிலோ விதை, வீரிய ஒட்டு ரகங்களுக்கு 6 கிலோ போதுமானது. விதைகளை செடிக்கு செடி 20 செ.மீ. மற்றும் பாருக்கு பார் 45 செ.மீ இடைவெளி இருக்கும் வகையில் 4 செமீ ஆழத்தில் விதைக்க வேண்டும்.

சாமை: வறட்சியைத் தாங்கி உயர் விளைச்சல் தரக்கூடிய சாமை ரகங்களான கோ 3, கோ (சாமை) 4, பையூர் 2 மற்றும் கே 1 ஆகிய ரகங்களைச் சாகுபடி செய்ய வேண்டும். ஏக்கருக்கு 5 கிலோ விதை போதுமானது. பயிரின் வளர்ச்சி ஒரே சீராக இருக்க விதைப்பான் மூலம் வரிசை விதைப்புச் செய்ய வேண்டும்.

இதன்மூலம் அதிக பரப்பளவில் மண் ஈரம் காய்வதற்கு முன் விதைப்புச் செய்யலாம். விதைகளை 2.5 செ.மீ. ஆழத்தில் வரிசைக்கு வரிசை 25 செ.மீ. இடைவெளியும், பயிருக்கு பயிர் 10 செ.மீ. இடைவெளியும் இருக்கும் வகையில் விதைக்க வேண்டும் என்றார் அவர்.

### 500 டன் விதை நெல் ஆர்டர் வரும்  கோபி வேளாண்மை சங்கம் எதிர்பார்ப்பு

டெல்டா பாசனப் பகுதியில் இருந்து, 500 டன் விதை நெல் ஆர்டர் வரும் என்ற எதிர்பார்ப்பில் கோபி வேளாண் சங்கத்தினர் உள்ளனர்.

கோபிசெட்டிபாளையம், மொடச்சூர் ரோட்டில் கோபி வேளாண்மை உற்பத்தியாளர் கூட்டுறவு விற்பனை சங்கம் செயல்பட்டு வருகிறது. விவசாயிகளிடம் இருந்து நேரடியாக நெல் கொள்முதல் செய்யப்படுகிறது. பின்னர் அந்த நெல் தரம் பிரிக்கப்பட்டு, நவீன இயந்திரங்கள் மூலம் விதை நெல் உற்பத்தி செய்யப்படுகிறது. இவ்வாறு உற்பத்தி செய்யப்படும் விதை நெல்கள் விவசாயிகளுக்கு குறைந்த விலையில் விற்கப்படுகின்றன.

இங்கு உற்பத்தி செய்யப்படும் விதை நெல், ஈரோடு, சேலம், நாமக்கல், கரூர், திருச்சி, தஞ்சாவூர், திருவாரூர், புதுக்கோட்டை, பெரம்பலூர், கடலூர், நாகப்பட்டினம் ஆகிய 11 டெல்டா மாவட்டங்களுக்கு அனுப்பி வைக்கப்படுகிறது. இங்கு தரமான விதை நெல் குறைந்த விலையில் கிடைப்பதால், விவசாயிகள் அதிக அளவில் வாங்கிச் செல்கின்றனர்.

இந்தக் கூட்டுறவு சங்கத்தில் ஏ.பி.டி-39 ரக விதை நெல் 2 டன்னும், ஏ.பி.டி-45 ரக விதை நெல் 20 டன்னும், பி.பி.டி. ரக விதைநெல் ஒரு டன்னும், ஏ.எஸ்.டி.16 ரக விதைநெல் 12 டன்னும் இருப்பு உள்ளது. இதில் ஏ.பி.டி-39 ரக விதை நெல் கிலோவு ரூ. 35-க்கும், ஏ.பி.டி-45 ரக விதை நெல் கிலோவுக்கு ரூ. 35-க்கும், பி.பி.டி. ரக விதை நெல் கிலோ ரூ. 38-க்கும், ஏ.எஸ்.டி-16 ரக விதை நெல் ரூ. 37-க்கும் விற்பனை செய்யப்படுகிறது.

மேலும் 47,455 கிலோ காலாவதியான ஐ.ஆர்-20 விதைநெல் இருப்பு உள்ளது. இந்த விதைநெல்லை ஏலம் விடுவதற்கு ஒப்பந்தம் விடப்பட்டுள்ளது.

தற்போது கர்நாடகப் பகுதியில் பலத்த மழை பெய்து வருவதால் மேட்டூர் அணைக்கு நீர்வரத்து அதிகரித்துள்ளது. இதனால் அணையின் நீர்மட்டம் 100 அடியைத் தாண்டியுள்ளது. மேட்டூர் அணையில் இருந்து பாசனத்திற்கு தண்ணீர் திறக்கப்படும் என்று முதல்வர் ஜெயலலிதா அறிவித்துள்ளார்.

இதனால் டெல்டா பாசனப் பகுதிகளில் பல மாதங்களுக்குப் பிறகு நெல் சாகுபடிப்

பணி தொடங்க உள்ளது. எனவே, விவசாயிகள் விதை நெல் கேட்டு கோபி வேளாண்மை உற்பத்தியாளர் கூட்டுறவு விற்பனை சங்கத்திடம் தொடர்பு கொண்டுள்ளனர்.

இதுகுறித்து கோபி வேளாண்மை உற்பத்தியாளர்கள் கூட்டுறவு விற்பனை சங்க அதிகாரி கூறியதாவது:

இங்கு உற்பத்தி செய்யப்படும் விதை நெல் தமிழ்நாடு முழுவதும் அனுப்பி வைக்கப்படுகிறது. மேட்டூர் அணையில் இருந்து டெல்டா பாசனத்திற்கு தண்ணீர் திறக்கப்பட உள்ளது. இதையொட்டி விவசாயிகள் விதை நெல் கேட்டுள்ளனர். இதுவரை கரூர் போன்ற மாவட்டங்களில் இருந்து 150 டன் வரை விதை நெல் கேட்டு ஒப்பந்தம் வந்துள்ளது.

தஞ்சாவூர், திருவாரூர் ஆகிய மாவட்டங்களில் இருந்து விதை நெல் கேட்டு, இன்னும் சில நாட்களில் ஒப்பந்தம் கொடுத்து விடுவார்கள். மொத்தம் 500 டன் விதை நெல்லுக்கு ஒப்பந்தம் கிடைக்கும் என எதிர்பார்க்கிறோம் என்று கூறினார்.

**பருத்தி விவசாயிகள் கவனத்துக்கு**

பருத்தி பயிரிட விரும்பும் விவசாயிகள் விதை உரிமம் பெற்ற விதை விற்பனை நிலையங்களின் மூலம் பருத்தி விதைகளைப் பெற்றுக் கொள்ளுமாறு வேலூர் விதை ஆய்வு துணை இயக்குநர் கேட்டுக் கொண்டார்.

இதுகுறித்து அவரது செய்திக் குறிப்பு:

மாவட்டத்தில் திருப்பத்தூர், கந்திலி, ஜோலார்பேட்டை, குடியாத்தம், நாட்டறம்பள்ளி மற்றும் ஆலங்காயம் பகுதிகளில் பருத்தி விதைப்பு மேற்கொள்ளப்படவுள்ளது. பருத்தி பயிரிட விரும்பும் விவசாயிகள் அனைவரும் விதை உரிமம் பெற்ற விதை விற்பனை நிலையங்களின் மூலம் பருத்தி விதைகளை பெற்று பயிர் செய்யலாம்.

அவ்வாறு விதைகள் வாங்கும்போது உரிய விவரங்கள் குறிக்கப்பட்ட ரசீது பெற்றுக் கொள்ள வேண்டும்.

மேலும் பி.டி. ரக பருத்தி விதை பாக்கெட்டின் மீது குறிப்பிடப்பட்டுள்ள அதிகபட்ச விற்பனை விலைக்கு மேல் அதிக தொகை கொடுத்து விதைகளை வாங்க

வேண்டாம்.

உரிய ரசீது இன்றி, அதிக விலைக்கு யாரேனும் பருத்தி விதைகளை விற்பனை செய்வது தெரியவந்தால், வேலூர் தொரப்பாடியில் உள்ள வேளாண்மை இணை இயக்குநர் அலுவலகத்தின் 2-வது தளத்தில் உள்ள விதை ஆய்வு துணை இயக்குநர் அலுவலகத்தை தொலைபேசி எண்.0416-2264562-ல் தொடர்புகொண்டு தகவல் அளிக்கலாம்.

**பவானிசாகர் நீர்மட்டம்**

பவானிசாகர் அணையின் நீர்மட்டம் புதன்கிழமை நிலவரப்படி 74.88 அடியாக இருந்தது.

அணையின் அதிகபட்ச நீர்த்தேக்க உயரம் 105 அடி. அணைக்கு விநாடிக்கு 1,854 கனஅடி நீர் வந்தது. அணையில் இருந்து ஆற்றில் 1,000 கனஅடி நீரும், வாய்க்காலில் 2,000 கனஅடி நீரும் திறந்துவிடப்பட்டது. அணையில் நீர் இருப்பு 13.12 டி.எம்.சி.

தினமலர்

**இன்றைய வேளாண் செய்திகள்**

**01.08.2013**

## வறட்சி நிவாரண நிதி வழங்க வலியுறுத்தல்

வத்தலக்குண்டு:வறட்சி நிவாரணம் நிதி வழங்க வேண்டும் என ஊராட்சி தலைவர்கள் கூட்டமைப்பு வலியுறுத்தி உள்ளது.

வத்தலக்குண்டில் ஊராட்சி தலைவர்கள் கூட்டமைப்பு கூட்டம் தலைவர் தனபால் தலைமையில் நடந்தது. செயலாளர் ராம்தாஸ் முன்னிலை வகித்தார். பொருளாளர் மரியலூயிஸ் வரவேற்றார். புதிய நிர்வாகிகள் தேர்ந்தெடுக்கப்பட்டனர். கூட்டத்தில், பஞ்சாயத்து ராஜ் சட்டப்படி மத்திய அரசு நிதியை ஊராட்சிக்கு நேரடியாக வழங்குதல், தேசிய ஊரக வேலை வாய்ப்பு திட்டத்தில், பயனாளிகளுக்கு சம்பளத்தை விரைவாக வழங்க நடவடிக்கை எடுக்க வலியுறுத்தப்பட்டது. வத்தலக்குண்டு ஒன்றியம் வறட்சியால் கடுமையாக பாதிக்கப்பட்டு உள்ளது. தமிழக அரசு வத்தலக்குண்டு ஊராட்சி ஒன்றியத்தில் உள்ள, கிராம ஊராட்சிகளுக்கு வறட்சி நிவாரண நிதி வழங்க வேண்டும். நிதியை நேரடியாக ஊராட்சிகளுக்கே வழங்க வேண்டும் என தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. தும்மலப்பட்டி ஊராட்சி தலைவர் உதயகுமார் நன்றி கூறினார்.

## விவசாயிகள் கூட்டம்

ராஜபாளையம்:ராஜபாளையம் வேளாண் விரிவாக்க மையத்தில், த விவசாயிகள் குறைதீர் கூட்டம் நடந்தது. உதவி இயக்குனர் தனலட்சுமி தலைமை வகித்தார். விவசாயிகள் பேசுகையில், "கிணறு வெட்ட, தூர்வார, ஆழ்துளை குழாய் அமைக்க, ஏற்பாடு செய்யவேண்டும். அரசு திட்டங்கள் குறித்து, அணுகினால் பட்டா கேட்கின்றனர். பட்டா பெற வருவாய் அலுவலகத்திற்கு, அலையவேண்டி உள்ளது,' என்றனர். வேளாண்மை துறை, தோட்டக்கலை, பட்டுவளர்ச்சி,

வேளாண் வணிகம், கால்நடை பல்கலை, கூட்டுறவு வங்கி, ஒழுங்குமுறை விற்பனை கூடம், நீர்வளம், மீன் வளம் போன்ற துறைகளை சேர்ந்த அதிகாரிகள் விளக்கம் அளித்தனர்.

## தண்ணீர் தட்டுப்பாடு தென்னை விவசாயிகள்.... பாதிப்பு கண்டுகொள்ளாத தோட்டக்கலைத்துறை அதிகாரிகள்

விருதுநகர்:விருதுநகர் மாவட்டத்தில் தண்ணீர் தட்டுப்பாடு காரணமாக 21 ஆயிரம் ஏக்கரில் பயிரிடப்பட்டுள்ள தென்னை மரங்கள் கருகி வருகின்றன.
தோட்டக்கலைத்துறை அதிகாரிகள் கண்டு கொள்ளாததால் விவசாயிகள் பாதிப்படைந்துள்ளனர்.
விருதுநகர் மாவட்டத்தில் மேற்கு மலை தொடர்ச்சி அடிவாரப்பகுதிகளில் விவசாயிகள் தென்னை பயிரிட்டுள்ளனர். வத்திராயிருப்பு கான்சாபுரம், கூமாப்பட்டி, புதுப்பட்டி, கிருஷ்ணன் கோயில், ஸ்ரீவில்லிபுத்தூர், திருவண்ணாமலை, செண்பகதோப்பு, தேவதானம், சேத்தூர் ஆகிய பகுதிகளில் தென்னை 21 ஆயிரம் ஏக்கர் பரப்பளவில் பயிரிட்டுள்ளனர். போதுமான மழை இல்லாததால் தண்ணீர் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது. கடந்த வடகிழக்கு பருவ மழையும், தென் மேற்கு பருவ மழையும் பெரிய அளவில் பெய்யவில்லை. நிலத்தடி நீர் மட்டம் பாதிக்கப்பட்டுள்ளது. கிணறுகளில் தண்ணீர் இன்றி வறண்டு விட்டன. பல இடங்களில் போர்வெல் போட்டும், தண்ணீர் இல்லாத நிலை உள்ளது. பல ஆண்டுகளாக வளர்த்த மரங்கள் பட்டு போக கூடாது, என்பதற்காக விவசாயிகள் டேங்கர் லாரிகள், டிராக்டர்களில் விலைக்கு தண்ணீர் வாங்கி பாய்ச்சி வருகின்றனர். விவசாயிகள் தென்னையில் வாடல் நோய், காண்டமிருக வண்டு, சொறி நோய்களால் பாதிக்கப்பட்டுள்ளன. இதிலிருந்து காப்பாற்றினால், தண்ணீர் இல்லாத நிலையில் தென்னை மரங்கள் கருகி வருகிறது. தேங்காய் மார்க்கெட்டும் வீழ்ச்சியை சந்தித்து வருகிறது. ஒரு தேங்காய் நான்கு முதல் ஐந்து ரூபாய் வரை விற்பனை செய்யப்பட்ட நிலை மாறி இன்று அதிகபட்சமாக 2.80 ரூபாய் முதல் மூன்று ரூபாய்க்குள் தான் விற்பனையாகி வருகிறது, விவசாயிகள் விலைக்கு தண்ணீர் வாங்கி பாய்ச்சி, உற்பத்தி செய்தும், விலை கிடைக்காமல் நஷ்டத்தை சந்தித்து வருகின்றனர்.

விஜயமுருகன் கூறியதாவது: தென்னை விவசாயிகள் தண்ணீர் இல்லாமல் விலைக்கு வாங்கி தண்ணீர் பாய்ச்சி வருகின்றனர். முந்தைய கலெக்டர் பாலாஜி இருந்த போது 400 விவசாயிகள் விண்ணப்பம் செய்து தேர்வு பெற்றனர். அதிகாரிகள் காலதாமதம் காரணமாக, அன்றைய திட்ட மதிப்பீட்டை காட்டிலும் அதிகமாக உள்ளது. தனியார் நிறுவனங்கள் சொட்டு நீர் உபகரணங்களை வழங்க மறுத்து வருகிறது. பிரச்னைகளை கண்டு கொள்ளாத நிலையில் அதிகாரிகள் உள்ளனர். விரைந்து சொட்டு நீர் கருவிகள் விவசாயிகளுக்கு கிடைக்க நடவடிக்கை எடுக்க வேண்டும், என்றார்.

அப்சர் உசேன், கூமாப்பட்டி, விவசாயி: தென்னை மரங்கள் பல ஆண்டுகளாக பாடுபட்டு வளர்த்துள்ளோம். தற்போது நிலத்தடி நீர் இல்லாததால் லாரி, டிராக்டர்கள் மூலம் விலைக்கு வாங்கி பாய்ச்சி வருகிறோம். இதில் நோய்கள், போதிய விளைச்சல், விலை வீழ்ச்சியால் நஷ்டமடைந்து வருகிறோம். சொட்டு நீர் பாசன மானியங்களை துரிதமாக வழங்கி தென்னை விவசாயத்தை காப்பாற்ற வேண்டும்.

சுந்தரராஜன், தோட்டக்கலை இணை இயக்குனர் கூறியதாவது: இது வரையில் 44 விவசாயிகளின் விண்ணப்பங்கள் பரிசீலனை செய்யப்பட்டு சொட்டு நீர் மானியம் வழங்கப்பட்டு வருகிறது. பல விவசாயிகள் விண்ணப்பிக்காமல், மானியம் கிடைக்கவில்லை என்கின்றனர். அரசு வழங்கும் நிதி ஒதுக்கீட்டுக்கு ஏற்ப விவசாயிகளுக்கு சொட்டு நீர் மானியம் வழங்கி, பாசனத்திற்கு நடவடிக்கை எடுத்து வருகிறோம், என்றார்.

### உழவர் பாதுகாப்பு திட்டம்விவசாயிகளுக்கு வேண்டுகோள்

திருநெல்வேலி:நெல்லை மாவட்டத்தில் உழவர் பாதுகாப்பு திட்டத்தின் கீழ் பயன் பெற விவசாயிகளுக்கு வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது.

நெல்லை மாவட்டத்தில் முதலமைச்சரின் உழவர் பாதுகாப்பு திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இத்திட்டம் 2.50 ஏக்கர் நன்செய் நிலம் அல்லது 5 ஏக்கருக்கு மேற்படாத புன்செய் நிலத்தை சொந்தமாக வைத்திருந்து அந்த நிலத்தில் நேரடியாக பயிர் செய்யும் 18 வயது முதல் 65 வயது வரை உள்ள அனைத்து சிறு, குறு விவசாயிகள் (நேரடி விவசாயம் செய்பவர்) மற்றும் விவசாயம் சார்ந்த

தொழிலில் ஊதியத்திற்கு வேலை செய்பவர்கள் அல்லது குத்தகை அடிப்படையில் ஈடுபட்டுள்ள குத்தகைதாரர்கள் மற்றும் தொழிலாளர்கள் இத்திட்டத்தின் கீழ் மூல உறுப்பினர்களாக பதிவு பெற தகுதி உடையவர்கள்.இத்திட்டத்தின் கீழ் பயன் பெற விரும்பும் பொதுமக்கள் அந்தந்த பகுதி வி.ஏ.ஓக்கள் மூலமாக அந்தந்த தாலுகா சமூக பாதுகாப்பு திட்ட தாசில்தார்களை அணுகலாம் என்று கலெக்டர் சமயமூர்த்தி தெரிவித்தார்.

## வாழையில் ஊடுபயிராக பூசணி சாகுபடி

கோபிசெட்டிபாளையம்: வாழையில் ஊடுபயிராக பூசணி பயிரிடுவதால், கூடுதல் வருவாய் கிடைப்பதால், கோபி சுற்று வட்டாரத்தில் வாழையில் ஊடுபயிராக பூசணி சாகுபடி செய்வதில் ஆர்வம் காட்டி வருகின்றனர்.கோபி அரக்கன்கோட்டை, தடப்பள்ளி, கீழ்பவானி, குண்டேரிப்பள்ளம் அணை பாசன பகுதிகளான பங்களாபுதூர், காசிபாளையம், கொங்கர்பாளையம், வாணிபுத்தூர், வினோபா நகர், பெரும்பள்ளம் அணை பாசன பகுதிகளான கெம்பநாயக்கன்பாளையம், பெரியகொடிவேரி, டி.ஜி.புதூர் பகுதிகளில் தற்போது நெல் அதிகளவில் பயிரிடப்படுகிறது. நெல்லுக்கு அடுத்தப்படியாக கரும்பு, வாழை மற்றும் மஞ்சள் பயிர்கள் சாகுபடி செய்யப்பட்டுள்ளன.

விவசாய கூலியாட்கள் பற்றாக்குறையால், தோட்டக்கலை பயிர்களான காய்கறிகளை விவசாயிகள் பயிரிடுகின்றனர். கத்தரிக்காய், வெண்டை, தக்காளி, பாகற்காய், காலிஃபிளவர், கீரை வகைகள் மற்றும் பூ வகைகளை அறுவடை செய்ய கூலியாட்கள் தேவை இல்லை. குடும்ப உறுப்பினர்களே பெரும்பாலும் அறுவடை செய்கின்றனர். தோட்டக்கலை பயிர்கள் மூலம் அதிகளவில் லாபமும் கிடைக்கிறது.கோபி, நம்பியூர் மற்றும் டி.என்.பாளையம், அளுக்குளி, அரக்கன்கோட்டை உள்ளிட்ட பகுதிகளில் வாழை ஊடு பயிராக பூசணி பயிரிடப்பட்டது.விவசாயிகள் கூறியதாவது:கோபி சுற்று வட்டாரத்தில், 20 முதல், 25 ஆயிரம் ஏக்கரில் வெள்ளை பூசணி, சாம்பார் பூசணி மற்றும் சேனை கிழங்கு பயிரிடப்படுகிறது. சேனை கிழங்கு எட்டு மாத பயிராகும். மஞ்சளில் அதிகளவில் ஊடுபயிர் செய்யப்படுகிறது. களிமண் பகுதியில் சேனை கிழங்கு நன்கு வளரும்

தன்மை கொண்டது. சேனை கிழங்கு பத்து மாத பயிராக இருந்தாலும், ஏழு மாதத்தில் அறுவடைக்கு தயாராகி விடும். ஒரு ஏக்கரில், 15 முதல், 20 டன் கிழங்கு உற்பத்தியாகிறது. வெள்ளை பூசணி மற்றும் சாம்பார் பூசணி தனியாகவும், வாழையில் ஊடுபயிராகவும் சாகுபடி செய்யப்படுகிறது. ஏக்கருக்கு, 20 டன் கிடைக்கிறது.அறுவடை செய்யப்படும் சேனை கிழங்குகள் மற்றும் வெள்ளை பூசணி, சாம்பார் பூசணி ஆகியவை தமிழகத்தில் தஞ்சை, சென்னை, திருச்சி, கும்பகோணம் மற்றும் கேரளா, கர்நாடகா, துபாய் ஆகிய இடங்களுக்கு அதிகளவில் அனுப்பப்படுகிறது.சேனை கிழங்கு பயிரிட ஏக்கருக்கு, நான்கு டன் விதை இருந்தால் போதும். மூன்று மாதத்துக்கு பின் களை எடுத்து, இரண்டு மூட்டை பொட்டாஷ், இரண்டு மூட்டை டி.ஏ.பி., வைத்தால் போதும். முட்டுகூலி செலவு ஏக்கருக்கு, 50 முதல், 60 ஆயிரம் ரூபாய் வரை ஆகும். ஏக்கருக்கு, 15 முதல், 20 டன் கிடைக்கும்.பூசணிக்கு களை எடுக்கும் பணி இல்லை. ஏக்கருக்கு, 30 முதல், 50 ஆயிரம் ரூபாய் வரை செலவாகும். 15 முதல், 20 டன் கிடைக்கும். வெள்ளை பூசணி ஒரு டன், 7,000 ரூபாய்க்கு விற்பனையாகிறது. சிறிய காய், 5,000 ரூபாய்க்கு கிடைக்கிறது, என்றனர்.

## தீவனப்புல் வளர்ப்பிலும் நல்ல லாபம் பார்க்கலாம்

காஞ்சிபுரம்:கால்நடைகளுக்கு தேவையான தீவனப்புல்லை சாகுபடி செய்து, தினமும் வருமானம் ஈட்டி வருகிறார் காஞ்சிபுரத்தை சேர்ந்த விவசாயி.
காஞ்சிபுரம் ஆனந்தஜோதி தெருவை சேர்ந்தவர் பாலாஜி, 48. விவசாயி. இவர் பல்லவர் மேடு கிழக்குப் பகுதியில், கோ 3, கோ 4 ரக தீவனப்புல்லை 2 ஏக்கர் பரபளவில் பயிரிட்டுள்ளார். புல் விற்பனையில், தினமும் 400 முதல் 500 ரூபாய் வரை வருமானம் கிடைப்பதாக தெரிவித்துள்ளார்.
இதுகுறித்து, காஞ்சிபுரத்தை சேர்ந்த விவசாயி பாலாஜி கூறியதாவது:
நான் ஏழு ஆண்டுகளாக தீவனப்புல்லை சாகுபடி செய்து வருகிறேன். சுற்றியுள்ள கிராமங்களில் இருந்து, தினமும் 30க்கும் மேற்பட்டோர் இதை வாங்கி செல்கின்றனர். நிலத்தை புழுதியாக நன்கு உழுது, கரும்பு நடவதுபோலவும், பாத்தியாகவும் நடவு செய்யலாம். பத்தாவது நாளில் புல் துளிர்விடும்.

பின், 30வது நாளில் களை எடுத்து, மண் அணைக்க வேண்டும். அதன் பின் வாரத்திற்கு ஒரு முறை தண்ணீர் பாய்ச்சினால், புல் செழிப்பாக வளரும். 45வது நாளில் பல இதழ்களால் 4 அடி வரை புல் வளர்ந்து விடும். அடுத்து, அறுவடை செய்யலாம். 15 கிலோ எடை கொண்ட ஒரு கட்டு 30 ரூபாய்க்கு விற்கலாம். தீவனப்புல்லின் "விதை கணைகளை' முக்கால் அடி உயரத்திற்கு வெட்டி கரூர், நாமக்கல், ஈரோடு உள்ளிட்ட மாவட்டங்களுக்கு விற்பனைக்காக அனுப்பி வைக்கிறேன். ஒரு விதை கணை 50 பைசாவில் இருந்து ஒரு ரூபாய் வரை விலை போகிறது," என்றார்.

## விவசாய விளை நிலங்கள் வறட்சியால் தரிசாக மாறும் அவலம்

விழுப்புரம்:பருவமழை பொய்த்து வருவதால், விழுப்புரம் மாவட்டத்தின் பல கிராமங்களில் நூற்றுக்கணக்கான ஏக்கர் நிலங்கள் பயிர் செய்யாமல் தரிசாக காட்சியளிக்கின்றன.

மாவட்டத்தில் கடந்தாண்டு வறட்சியால் பல இடங்களில் விவசாயம் மேற்கொள்ள முடியாத நிலை ஏற்பட்டது. இதனால் விவசாயிகள் இந்தாண்டாவது தேவையான அளவு மழை பெய்யுமென எதிர்பார்த்தனர்.

இருப்பினும் கடந்த ஜூன் மாதம் 10ம் தேதி தமிழகத்தில் தென்மேற்கு பருவமழை துவங்கியது. துவக்கத்தில் மாவட்டத்தில் குறைந்த மழை பெய்தது. தொடர் வறட்சி நிலவுவதால் பல கிராமங்களில் நிலத்தை உழுது தயார்படுத்த முடியாமல் விவசாயிகள் தரிசாகவே போட்டுள்ளனர்.

விழுப்புரம் சுற்றியுள்ள கொளத்தூர், கண்டமானடி உட்பட பல கிராமங்களில் நூற்றுக் கணக்கான ஏக்கர் நஞ்சை நிலங்கள் உழவு செய்து பயிர் செய்ய போதிய தண்ணீர் வசதி இல்லாமல் தரிசாக உள்ளன.

## ஆப்பிள் சீஸன் துவக்கம்டில்லியில் இருந்து வரத்து

சேலம்: சேலத்தில் மாம்பழம் சீஸன் முடிந்து, ஆப்பிள் சீஸன் துவங்கியுள்ளது.கடந்தாண்டு, பருவமழை பொய்த்ததால், மாம்பழங்களின் வரத்து குறைவாகவே இருந்தது. தற்போது, மாம்பழம் சீஸன் நிறைவடையும் நிலையில், ஆப்பிள் பழங்களின் சீஸன் துவங்கி விட்டது. சீஸன் காலத்தில் மட்டுமே, ஆப்பிள்

விலை குறைவாக இருக்கும். ஆப்பிள் பழத்தில் புரதம், கால்சியம், இரும்புச்சத்து ஆகியவை ஒன்று சேர்ந்து இருப்பதால், விற்பனை அதிகம்.சேலத்தில் ஆப்பிள் வரத்து குறித்து, சேலம் மாங்காய் மற்றும் பழ வியாபாரிகள் சங்கத் தலைவர் ஜெயபால் கூறியதாவது:காஷ்மீர் மாநிலத்தில் உற்பத்தி செய்யப்படும் ஆப்பிள்கள் அங்கிருந்து பெங்களூரு, சென்னை மற்றும் டில்லி போன்ற பெரிய நகரங்களுக்கு செல்கிறது. பின், ஆப்பிள் பழங்கள் "பேக்' செய்யப்பட்டு, தினமும், சேலம் நகரத்துக்கு வரத்தாகின்றன. சிம்லா ஆப்பிள், ராயல் சிம்லா, ரிச்சோர்ட் ஆகிய ரகங்கள், சேலம் நகரத்துக்கு தினமும், 10 டன் வரத்தாகின்றன.ஆகஸ்ட் மாதம் தான், ஆப்பிளுக்கு சீஸன் துவக்கம். செப்டம்பரில், ஆப்பிள் பழங்களின் வரத்து அதிகமாகி விடும். அப்போது, மட்டுமே ஆப்பிள் பழங்களின் விலை குறைவாக இருக்கும். மற்ற நாட்களில், ஆப்பிள் பழங்களின் விலை கூடுதலாகவே இருக்கும். ஆப்பிள் ரகங்களுக்கு ஏற்றவாறு விலை நிர்ணயம் செய்யப்படுகிறது. தற்போது வரத்தாகியுள்ள ஆப்பிள் பழங்கள், ஒரு கிலோ மொத்த விலையில், 120 முதல், 180 ரூபாய் வரை உள்ளது. சில்லரை கடைகளில், விலை சற்று கூடுதலாக இருக்கும்.இவ்வாறு அவர் கூறினார்.

தினகரன்

**இன்றைய வேளாண் செய்திகள்**

**01.08.2013**

## 20 சதவீத மானியத்தில் விவசாயிகளுக்கு சோலார் பம்ப்

திருவள்ளூர்: 20 சதவீத மானியத்தில் சோலார் பம்ப் பெற விவசாயிகள் விண்ணப்பிக்கலாம் என திருவள்ளூர் வேளாண்மை பொறியியல் துறை செயற்பொறியாளர் ஆதித்தன் தெரிவித்துள்ளார். அவர் வெளியிட்டுள்ள அறிக்கை: விவசாயிகளின் நீர்ப்பாசன தேவையை பூர்த்தி செய்யும் வகையில் மரபுசாரா எரிசக்தியில் இயங்கக்கூடிய பம்ப் மூலம் பாசன வசதி ஏற்படுத்தி தருதல், இயற்கையாக கிடைக்கும் சூரிய சக்தியை விவசாய நீர்ப்பாசனத்துக்கு உபயோகிக்க வழிவகை செய்யப்பட உள்ளது. 2013-14ம் ஆண்டில் விவசாய பணிகளுக்கு ஆழ்துளை கிணற்றில் இருந்து நீர் இறைப்பதற்கு வசதி செய்து கொடுக்க திட்டமிடப்பட்டுள்ளது. சோலார் பம்ப் 5 எச்பி ஏசி நீர்மூழ்கி பம்ப் அமைக்க ரூ.5 லட்சம் செலவாகும்.

இதற்காக, தேசிய வேளாண் வளர்ச்சி திட்டத்தின் கீழ் 50 சதவீத மானியம், தமிழ்நாடு எரிசக்தி முகமை மூலம் 30 சதவீத மானியம் என 80 சதவீத மானியம் வழங்கப்படுகிறது. மீதமுள்ள 20 சதவீதம் ரூ.1 லட்சம் விவசாயிகள் பங்களிப்பாகும். சோலார் பம்ப் மானியத்தில் பெற விரும்பும் விவசாயிகள் பெயர், முகவரி, அடையாள அட்டைநகல், சிட்டா அடங்கல் நகல், நில வரைபடம் மற்றும் விவசாயிகளின் பங்களிப்பு தொகையை செலுத்தி பதிவு செய்யலாம். முன்னுரிமை அடிப்படையில் சோலார் பம்ப் அமைத்து கொடுக்கப்படும். மேலும் விவரங்களுக்கு திருவள்ளூர், பொன்னேரி, திருத்தணியில் உள்ள வேளாண் துறை அலுவலகத்தை தொடர்பு கொள்ளலாம். இவ்வாறு அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

**காய்கறி சாகுபடியில் விதை நேர்த்தி பயன்பாடு**

பெரம்பலூர்: பெரம்பலூரில் விவசாயிகளுக்கு காய்கறி சாகுபடியில் விதை நேர்த்தி பயன்பாட்டின் விளக்கம் அளிக்கப்பட்டது. பெரம்பலூர் தனலட்சுமி சீனிவாசன் மகளிர் கலை அறிவியல் கல்லூரி உயிர் தொழில்நுட்பவியல் மற்றும் உயர் தகவலியல் துறைகள் சார்பில் காய்கறி சாகுபடியில் உயிர் உரங்கள் என்ற தலைப்பில் பெரம்பலூர் உழவர்சந்தையில் புறப்பயன்பாட்டு நிகழ்ச்சி நடைபெற்றது. விவசாயிகள், காய்கறி சாகுபடியாளர்களிடம் சாகுபடி தொழில்நுட்பம், விதை நேர்த்தியின் பயன்பாடு, தரமான விதைகளை அடையாளம் காண்பது, நவீன தொழில்நுட்பம், கூடுதல் மகசூலுக்கான வழிமுறை, ரசாயன உரங்களால் ஏற்படும் பாதிப்பு, உயிர் உரங்களால் ஏற்படும் நன்மைகள் குறித்து முதுகலை இறுதியாண்டு மாணவிகள் விளக்கினர்.

தம்பிரான்பட்டி, வேலூர், சத்திரமனை, நொச்சியம், இரூர், பொம்மனப்பாடி, ரங்கநாதபுரம், பெரியவடகரை, வெண்பாவூர், விசுவக்குடி, முகமதுபட்டினம், எளம்பலூர், எசனை, கீழக்கரை, இரட்டைமலைசந்து ஆகிய பகுதிகளிலிருந்து உழவர்சந்தைக்கு காய்கறிகளை கொண்டு வந்து விற்பனை செய்யும் காய்கறி சாகுபடியாளர்கள், விவசாயிகள் கலந்து கொண்டனர்.

**வறண்ட நிலையில் ஆறுகள் அமராவதி அணை தண்ணீர் கிடைக்குமா**

கரூர்: வறண்ட நிலையில் ஆறுகள் உள்ளதால், அமராவதி அணை தண்ணீர் கிடைக்குமா என்று பழைய ஆயக்கட்டு பாசன விவசாயிகள் எதிர்பார்க்கின்றனர். தமிழகத்தில் பெரும்பாலான விவசாய நிலங்கள் ஆறுகளை சார்ந்தே உள்ளன. இதில், கரூர் மாவட்டத்தில் பெரும்பாலும் கிணற்று பாசனத்தை விட காவிரி மற்றும் அமராவதி ஆறுகளில் வரும் தண்ணீரை வைத்து தான் விவசாயம் அதிகளவு நடைபெற்று வருகிறது. திருப்பூர் மாவட்ட பகுதியில் இருந்து கரூர் நோக்கி வரும் அமராவதி ஆறு கரூர் மாவட்டம் திருமுக்கூடலூரில் காவிரி ஆற்றுடன் கலக்கிறது. அதற்கு முன்னதாக, சின்னதாராபுரம், ராஜபுரம்,

சுக்காலியூர், செல்லாண்டிப்பட்டி, அப்பிபாளையம் போன்ற பகுதிகளில் வாய்க்கால்கள் மூலம் வரும் அமராவதி ஆற்றுநீரை நம்பி ஆயிரக்கணக்கான ஏக்கரில் விவசாயம் செய்யப்பட்டு வருகிறது.

ஆண்டுதோறும் செழிப்பாக இருந்து வந்த இந்த விவசாய பகுதிகள் கடந்த சில ஆண்டுகளாக மோசமான நிலையில் உள்ளது. அமராவதி ஆற்றின் பாசன வசதிகளை பெறும் பழைய ஆயக்கட்டு பாசன பகுதிகளில் உள்ள ஆயிரக்கணக்கான ஏக்கர் நிலங்கள் போதிய தண்ணீர் கிடைக்காத நிலையால் மிகவும் மோசமான நிலையில் உள்ளது. மேலும், விவசாயத்தை நம்பியுள்ள ஆயிரக்கணக்கான விவசாய குடும்பத்தினர்களும் அவதிப்பட்டு வருகின்றனர். இந்நிலையில், கடந்த சில மாதங்களுக்கு முன்பு அமராவதி ஆற்றில் புது ஆயக்கட்டு பாசன வாய்க்கால்களில் தண்ணீர் திறந்து விடப்பட்டு அப்பகுதிகளில் விவசாயம் நடைபெற்று வருகிறது. ஆனால், பாரம்பரியமிக்க பழைய ஆயக்கட்டு பகுதிகளில் போதிய அளவு தண்ணீர் வரத்து குறை வால் அனைத்து தரப்பு விவசாயிகளும் கடும் அவதியை சந்தித்து வருகின்றனர். பழைய ஆயக்கட்டு பாசன வசதியை திருப்பூர் மாவட்டத்தில் 10 ஆயிரத்துக்கும் அதிகமான ஏக்கர் நிலங்களும், கரூர் மாவட்டத்தில் சின்னதாராபுரம் வாய்க்கால், பள்ளபாளையம் வாய்க்கால், நஞ்சைக்காளக்குறிச்சி வாய்க்கால் உட்பட ஏராளமான வாய்க்கால்கள் போதிய தண்ணீர் கிடைக்காமல் இதை சார்ந்துள்ள அனைத்து விவசாயமும் கேள்விக்குறியாகும் நிலை ஏற்பட்டுள்ளது.

இது குறித்து கரூர் மாவட்ட பள்ளபாளையம், ராசவாய்க்கால் பாசன விவசாயிகள் சங்க செயற்குழு உறுப்பினர்கள் கூறியதாவது,மனோ கரன் கூறுகை யில், கரூர் மாவட்டத்தில் உள்ள பழைய ஆயக்கட்டு பாசன பகுதியை சுற்றிலும் 10க்கும் மேற் பட்ட வாய்க்கால்கள் செல்கின்றன. அனைத்து வாய்க்கால்களுக்கும் அமராவதி ஆற்றில் இருந்து தான் தண்ணீர் கிடைத்து வருகிறது. கடந்த ஒரு மாதத்துகது முன்பு ஒரே ஒருநாள்தான் இந்த வாய்க்கால்களில் தண்ணீர் விடப்பட்டது. அதன் பிறகு தண்ணீர் வரவேயில்லை. எனவே, அனைத்து விவசாயிகளின் நலன்கருதி

அதிகாரிகள் பழைய ஆயக்கட்டு விவசாயிகளுக்கு தண்ணீர் திறந்து விடுவதற்கான ஏற்பாடுகளை செய்ய வேண்டும் என்றார்.

நித்யானந்தம் கூறுகையில், அமராவதி அணையில் தற்போதைய நிலையில் குறிப்பிட தகுந்த அளவுக்கு தண்ணீர் உள்ளது. புதுஆயக்கட்டு பாசன வாய்க்கால்களில் தற்போது தண்ணீர் திறந்து விடப்பட்டுள்ளது. இதேபோல், கரூர் மாவட்டத்தில் உள்ள பழைய ஆயக்கட்டு பாசன வாய்க்கால்களிலும் தண்ணீர் திறந்து விட்டால் நன்றாக இருக்கும். இது குறித்து சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு கோரிக்கை மனு உட்பட பல முறைக ளில் தொடர்பு கொண்டு வருகிறோம். நடவடிக்கை எடுத்தால் நன்றாக இருக்கும் என்றார். ராமச்சந்திரன் என் பவர் கூறுகை யில், பழைய ஆயக் கட்டு பகுதிகளில் 15,000 ஏக்கர் அளவுக்கு ஆண்டுதோறும் விவசாயம் நடைபெற்று வருகிறது. ஆயக்கட்டு வாய்க்கால்களில் தண்ணீர் திறந்து விடுவதில் தாமதம் ஏற்படுவதால் பல்வேறு விவசாயங்கள் கடும் பாதிப்பை சந்தித்து வருகின்றன. மேலும், இந்த பகுதிகளில் சோளம், மஞ்சள், அவுரி போன்ற பல்வேறு பயிர்கள் சாகுபடி செய்யப்பட்டு வருகின்றன. அனைத்து விவசாயிகளும் பழைய ஆயக்கட்டு பாசன வாய்க்கால்களில் தண்ணீர் திறந்து விடுவது எப்போது என எதிர்பார்த்து காத்து கிடக்கின்றனர். விவசாயிகளின் நலன் கருதி தண்ணீர் திறந்து விடுவதற்கான ஏற்பாடுகளை செய்ய வேண்டும் என்றார்.

சக்திவேல் கூறுகையில், அமராவதி பாசன விவசாயிகளின் கோரிக்கை குறித்து தாராபுரத்தில் உள்ள செயற்பொறியாளர் அலுவலகத்துக்கு தான் செல்ல வேண்டியுள்ளது. இந்த அலுவலகம் ஏற்கனவே கரூரில் இருந்தது. மேலும், பழைய ஆயக்கட்டு வாய்க்கால்களில் தண்ணீர் இல்லாத காரணத்தால் வறண்ட நிலையில் உள்ளது. இதனால், விவசாயிகளும், அதை சார்ந்த குடும்பத்தினர்களும் சிரமப்பட்டு வருகின்றனர். எனவே, சம்பந்தப்பட்ட அதிகாரிகள் விவசாயிகளின் நிலை அறிந்து அமராவதி ஆற்றில் தண்ணீர் திறந்து விடுவதற்கான ஏற்பாடுகளை செய்து தந்தால் நன்றாக இருக்கும் என்றார்.
புதுஆயக்கட்டு பாசன வாய்க்கால்கள் திருப்பூர் மாவட்ட பகுதிகளில் உள்ளன.

இப்பகுதிகளுக்கு தண்ணீர் திறந்து விடப்பட்டுள்ள நிலையில், இதே நிலையில் உள்ள பழைய ஆயக்கட்டு பாசன வாய்க்கால்களிலும் தண்ணீர் திறந்து விட வேண்டும் என்பது தான் அனைத்து விவசாயிகளின் எதிர்பார்ப்பாக உள்ளது. அதிகாரிகள் இதற்கான ஏற்பாடுகளை செய்து, விவசாயத்தை காக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று விவசாயிகள் எதிர்பார்க்கின்றனர்.

**விவசாயிகளுக்கு தாமதமின்றி பயிர் கடன் கூட்டுறவு வங்கிகளுக்கு கலெக்டர் அறிவுறுத்தல்**

நாகை: சம்பா சாகுபடிக்கு காவிரியில் தண்ணீர் திறக்கவுள்ளதால், பயிர்க்கடன்களை தாமதமின்றி கூட்டுறவு வங்கிகள் வழங்க வேண்டும் என்று கலெக்டர் கேட்டுக்கொண்டுள்ளார். வருகிற 2ம்தேதி மேட்டூர் அணையிலிருந்து பாசனத்திற்கு தண்ணீர் திறக்கப்பட உள்ளதால் சம்பா சாகுபடியை சிறப்பாக மேற்கொள்வது தொடர்பான முன்னேற்பாடு கூட்டம்  நாகை கலெக்டர் அலுவலகத்தில் நேற்று நடைபெற்றது. கூட்டத்திற்கு தலைமை வகித்து கலெக்டர் முனுசாமி பேசியதாவது: நாகை மாவட்டத்தில் 1 லட்சத்து 2 ஆயிரம் எக்டேர் பரப்பில் சம்பா பயிரிடப்படும். இந்த ஆண்டு ஆகஸ்ட் 2ம்தேதி விவசாயத்திற்கு தண்ணீர் திறந்துவிடப்பட உள்ளதால், 1 லட்சத்து 20 ஆயிரம் எக்டர் பரப்பில் சம்பா சாகுபடி செய்ய துரித நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. மாவட்டம் முழுவதும் வாய்க்கால்கள், வடிகால்கள் தூர்வாரப்பட்டும், மதகுகள் சீரமைக்கப்பட்டும் உள்ளது. குளம், குட்டைகளும் தூர்வாரப்பட்டு ஆறுகளின் கரைகள் பலப்படுத்தப்பட்டுள்ளது. ஆறு வாய்க்கால்களில் காட்டாமணக்கு உள்ளிட்ட புதர்கள் முற்றிலும் அகற்றும் பணிகள் போர்க்கால அடிப்படையில் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. வேளாண். பெரியியல் துறையின் சார்பில் உழவு செய்ய டிராக்டர்கள் போதுமான எண்ணிக்கையில் இருப்பில் உள்ளது.

வேளாண். துறையின் சார்பில் சம்பா சாகுபடிக்கு தேவையான விதை நெல், வேளாண். விரிவாக்க மையங்களில் இருப்பு வைத்து விவசாயிகளுக்கு தட்டுப்பாடின்றி விநியோகம் செய்ய அறிவுறுத்தப்பட்டுள்ளது. உழவு இயந்திரங்களை தேவைக்கேற்ப தனியாரிடமிருந்து வாடகைக்கு எடுத்து

விவசாயிகளுக்கு குறைந்த வாடகைக்கு வழங்க அறிவுறுத்தப்பட்டுள்ளது.

அதேபோல் நடவு இயந்திரம், களை எடுக்கும் இயந்திரம், பூச்சி மருந்து தெளிப்பான், அறுவடை இயந்திரம் உள்ளிட்ட அனைத்து சாதனங்களும் போதுமான அளவில் இருப்பில் வைக்க அறிவுறுத்தப்பட்டுள்ளது. அனைத்து வகையான உரங்களும் இருப்பில் வைத்திருக்க வேண்டும். விவசாயிகளுக்கான பயிர் கடன்களை எந்தவித தாமதமும் இன்றி வழங்க கூட்டுறவுத்துறை மற்றும் வணிக வங்கிகளுக்கு அறிவுறுத்தப்படடுள்ளது. இவ்வாறு கலெக்டர் பேசினார். கூட்டத்தில், வேளாண். ஆணையரக துணை இயக்குனர் (பயிறு மற்றும் எண்ணை வித்துக்கள்) சந்திரசேகரன், டி.ஆர்.ஓ. ஆசியா மரியம், வேளாண். இணை இயக்குனர் ராஜேந்திரன், கூட்டுறவுத்துறை மாவட்ட பதிவாளர்கள் சுபாஷிணி, நளினா, முன்னோடி வங்கி மேலாளர் கதிர்வேல், பொதுப்பணித்துறை (காவிரி மற்றும் வெண்ணாறு) உதவி செயற்பெரியாளர்கள் அன்பரசன், சண்முகநாதன், இளங்கோ மற்றும் பலர்கலந்து கொண்டனர்.

**செந்துறையில் இன்று உழவர் பாதுகாப்பு திட்ட முகாம்**

அரியலூர்: செந்துறை தாசில்தார் அலுவலகத்தில் உழவர் பாதுகாப்பு திட்ட முகாம் இன்று நடக்கிறது.உழவர் பாதுகாப்பு திட்டத்தில் சிறு, குறு விவசாயிகள், விவசாய கூலி தொழிலாளர்களுக்கு கல்வி உதவித்தொகை, திருமண உதவித்தொகை, முதியோர் ஓய்வூதியத் தொகை வழங்கப்பட்டு வருகிறது. நலிவடைந்த விவசாய தொழிலாளர்களுக்கு ஓய்வூதிய தொகை, விபத்து நிவாரணத்தொகை, இயற்கை மரணத்திற்கான உதவித்தொகை, ஈமச்சடங்கு நிவாரண தொகை வழங்கப்பட்டு வருகிறது.

இந்த திட்டத்தில் பயன்பெறுவதற்காக உழவர் அட்டை வழங்கும் முகாம் நடந்து வருகிறது. அதன்படி செந்துறை தாசில்தார் அலுவலகத்தில் இன்று உழவர் பாதுகாப்பு திட்ட முகாம் நடக்கிறது. அரியலூர் தாசில்தார் அலுவலகத்தில் நாளையும், ஜெயங்கொண்டம் தாசில்தார் அலுவலகத்தில் 1ம் தேதியும் உழவர்

பாதுகாப்பு திட்ட முகாம் நடக்கிறது. தகுதியுள்ள அனைவரும் உழவர் பாதுகாப்பு திட்டத்தில் இணைந்து உதவித்தொகை பெற்று பயனடையலாம். இவ்வாறு கலெக்டர் ரவிகுமார் தெரிவித்துள்ளார்.

**நீர்வரத்து குறைந்தது காவிரி டெல்டா பாசனத்துக்கு நாளை மேட்டூர் அணை திறப்பு**




மேட்டூர்: கர்நாடக அணைகளில் உபரி நீர் திறக்கப்பட்டதால் மேட்டூர் அணை வேகமாக நிரம்பியது. இந்நிலையில், கர்நாடக அணை நீர்பிடிப்பு பகுதிகளில் மழை இல்லாததால் உபரி நீர் திறப்பு குறைக்கப்பட்டுள்ளது. இதனால் மேட்டூர் அணைக்கு நீர்வரத்தும் குறைந்துள்ளது. நேற்று முன்தினம் காலை அணைக்கு விநாடிக்கு 61,233 கன அடி நீர் வந்த நிலையில், நேற்று காலை 8 மணி நிலவரப்படி நீர் வரத்து 54,515 கனஅடியாக குறைந்துள்ளது. அணையின் நீர் மட்டம் 106.97 அடி. நேற்று முன்தினம் ஒரே நாளில் நீர் மட்டம் 2.75 அடி உயர்ந்துள்ளது.

அணையில் இருந்து விநாடிக்கு 10,800 கனஅடி வீதம் நீர் திறக்கப்படுகிறது. நீர் இருப்பு 74.16 டிஎம்சியாக உள்ளது.இந்நிலையில், காவிரி டெல்டா பாசன பகுதியில் சம்பா சாகுபடிக்காக நாளை முதல் மேட்டூர் அணை திறக்கப்பட்டு படிப்படியாக அதிகரிக்கப்படும். இதன் மூலம் காவிரி டெல்டா பாசன பகுதிகளில் 12 லட்சம் ஏக்கர் நிலம் பாசன வசதி பெறும்.15வது மதகில் ஓட்டை: இந்நிலையில், 16 கண் பாலத்தில் உள்ள 15வது மதகில் 2 இடங்களில் சிறு

துவாரம் ஏற்பட்டுள்ளது. இதன் வழியாக, தண்ணீர் பீறிட்டு வெளியேறுகிறது. இதன் வழியாக வெளியேறும் மீன்கள் போதிய நீரோட்டமின்றி ஆங்காங்கே செத்து கிடக்கின்றன.

**பெல்லாரி விலை உயர்வு; சின்னவெங்காயம் விலை சரிவு**



சேலம் : தமிழகத்தில் பல்வேறு பகுதிகளில் பெரிய வெங்காயம் விலை உயர்ந்தும், சிறிய வெங்காயம் விலை குறைந்துள்ளது. மகாராஷ்டிரா, கர்நாடகம், ஆந்திரா மாநிலங்களில் இருந்து அதிகளவில் பெரிய வெங்காயம் விற்பனைக்கு வருகிறது. ஜூன், ஜூலை மாதங்களில் பெரிய வெங்காயம் பயிரிடப்படுகிறது. இந்த வெங்காயம் விற்பனைக்கு வர 3 மாதங்கள் பிடிக்கும்.

தற்பொழுது இருப்பில் உள்ள பெரிய வெங்காயம் விற்பனைக்கு வருகிறது. வரத்து குறைந்துள்ளதால் பெரிய வெங்காயம் விலை தற்போது கூடியுள்ளது. ஒரு கிலோ ரூ.20ல் இருந்து தற்போது ரூ.45 ஆக உயர்ந்துள்ளது. உள்நாட்டு தேவையை கருத்தில் கொண்டு, வெளி நாடுகளுக்கு ஏற்றுமதி செய்வதும் தற்போது நிறுத்தப்பட்டுள்ளது.
சேலம் கடைவீதி வெங்காய வியாபாரிகள் கூறுகையில், ''பத்து நாட்களுக்கு முன்பு வரை பெரிய வெங்காயம் ரூ.20 வரை விற்பனை செய்யப்பட்டது.

தற்போது இதன் விலை கிலோ ரூ.45 வரை விற்பனை செய்யப்படுகிறது. வடமாநிலத்தில் பெரிய வெங்காயம் விதைப்புக்கான காலம் இது. மூன்று

மாதங்கள் கழித்து பெரிய வெங்காயம் புது வரத்து துவங்கும். அது வரை இருப்பில் உள்ள வெங்காயம் விற்பனை செய்யப்படும். மொத்த வியாபாரிகள் பெரிய வெங்காயத்தை பதுக்கி வருகின்றனர். பெரிய வெங்காயத்தின் ஏற்றுமதியும் நிறுத்தி வைக்கப்பட்டுள்ள நிலையில் இந்தளவுக்கு பெரிய வெங்காயம் விலை ஏற வாய்ப்பில்லை. தற்போதைய விலை ஏற்றத்துக்கு பதுக்கல் தான் காரணம்," என்றனர்.

இந்த சரிவு ஏன்?

நெல்லை: வெங்காயம் விலை கடந்த ஒரு மாதத்திற்கு முன்னர் வரை உச்சத்தில் இருந்தது. குறிப்பாக, சிறிய வெங்காயம் விலை கிலோ ரூ.100, ரூ.110 என்ற அளவுக்கு சென்றது. கடந்த 3 வாரங்களாக சிறிய வெங்காயம் விலைப் படிப்படியாக குறைந்தது. தற்போது கிலோ ரூ.35, ரூ.40 என தரத்திற்கு ஏற்ப விற்பனையாகிறது. அதே நேரத்தில், விலை குறைவாக இருந்த பல்லாரி வெங்காயத்தின் விலை சற்று அதிகரித்துள்ளது.

சிறிய வெங்காயம் தாராபுரம், பல்லடம், ஒட்டன்சத்திரம் பகுதிகளில் அதிகம் பயிரிடப்படுகின்றன. அங்கு உற்பத்தி குறைந்ததாலும், இலங்கைக்கு ஏற்றுமதி அதிக அளவில் இருந்ததாலும் தமிழகத்தில் சிறிய வெங்காயத்திற்கு தட்டுப்பாடு ஏற்பட்டது. ஜூன் மாதம் முதல் தென்மேற்கு பருவமழை கை கொடுப்பதால், பாவூர்சத்திரம் உள்ளிட்ட நெல்லை மாவட்ட பகுதிகளிலும் திருப்பூர், தாராபுரம் பகுதிகளிலும் வெங்காய விளைச்சல் அதிகரித்துள்ளது. வெளிநாட்டு வெங்காய ஏற்றுமதியும் குறைந்துள்ளது. இதன் காரணமாக சிறிய வெங்காயம் விலை படிப்படியாக குறைந்து கிலோ ரூ.35 என்ற நிலையில் இருக்கிறது. அக்டோபர் மாதம் வரை இதே நிலை நீடிக்க வாய்ப்பு உள்ளது.

எக்ஸ்ட்ரா தகவல்

வெங்காயம் விலை கிலோ ரூ.70 முதல் 80 வரை உயர்ந்தது. இதனால் 1998ல் டெல்லி, ராஜஸ்தான் மாநிலங்களில் நடந்த சட்டசபை தேர்தலில் கட்சிகளின் வெற்றி தோல்வியை நிர்ணயிக்கும் சக்தியாக மாறியது. 1980ல் மத்திய ஜனதா அரசையே அசைத்து கவிழ்த்துவிட்டது.